# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1915 - 2015 මැයි මස 15 වැනි සිකුරාදා - 2015.05.15

*1915 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 626 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 647 |


**கவனிக்க.-** நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டமூலம் மற்றும் சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் ஆகியன 2015, மாச்சு 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பிகளாக வெளியிடப்படுகின்றன.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, யூன் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, மே மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு துபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, ஆனி மாதம் 8 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, சித்திரை 23.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | நீர்கொழும்பு | தலாஹேன பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வடக்கு அலுத்குரு கோறளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கம்பஹா |
| கம்பஹா | தொம்பே | வேகே பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கிழக்கு சியனே கோறளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கம்பஹா |
| கம்பஹா | தொம்பே | கேரகல பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கிழக்கு சியனே கோறளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கம்பஹா |
| கம்பஹா | அத்தனகல்ல | எகொடபொத வடக்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கிழக்கு சியனே கோறளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கம்பஹா |

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | மீரிகம | தெபேஹெர பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கிழக்கு சியனே கோறளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கம்பஹா |

5-270

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மாத்தளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, யூன் மாதம் 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, ஏப்பிறல் 27.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தளை | லக்கல-பல்லேகம | லக்கல-பல்லேகம பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மாத்தளைப் பிரிவின் விவாக (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மாத்தளை |

5-360

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - பொலன்நறுவை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, யூன் மாதம் 15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, ஏப்பிறல் 28.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பொலன்நறுவை | ஹிங்குரக்கொட | மேற்கு சிங்களப்பற்று பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தமன்கடுவை விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பொலன்நறுவை |

5-411

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, ஆனி மாதம் 15 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, ஏப்பிறல் 29.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | கற்பிட்டி | கற்பிட்டி நகரப் பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |
| புத்தளம் | சிலாபம் | சிலாபம் நகரப் பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |
| புத்தளம் | கற்பிட்டி | நுரைச்சோலை நகரப் பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |

5-412

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2015, யூன் மாதம் 15 ஆந் திகதியன்று அல்லது முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, ஏப்பிறல் 28.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | திவுலபிட்டிய | யட்டிகஹ வடக்குப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹாபிட்டிகம் கோறளை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா |

5-413

---

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி (சாதாரணம்)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர்" (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினை குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2015.08.05 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்புதல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது, என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 1,71,360 - 7 x 1,740 - 10 x 2,160- 17 x 2,880 - 2,54,100 ரூபா.

* மேலும் இவ்வுத்தியோகத்தருக்கு மற்றைய அரச உத்தியோகத்தர் களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுடன் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/2013 இன் பிரகாரம் அமைவான கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவராவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதந்தோறும் வழங்கப்படும் :-

(அ) கடினக் கொடுப்பனவுகள் 2,000 ரூபா ;
(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :
(1) வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு 10,500 ரூபா ;
(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு 8,400 ரூபா.

(இ) வேறு கொடுப்பனவுகள் :
(1) சீருடைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250 ;

(ஈ) இலவச பயண வசதி ;

(உ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடாக இருப்பினும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் பெற முடியும்) ;

(ஊ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(எ) தமது விளையாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வசதிகள் ;

(ஏ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும் ;

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) ***வயதெல்லை.*** - வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) ***கல்வித் தகைமைகள்.*** - க.பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம் மற்றும் ஊடக மொழி உட்பட இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகள் முதலாவது அமர்வில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாட வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42 மற்றும் 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ.த.(சா. தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.**- க. பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந் திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படுவார்.

**குறிப்பு 3.**- விருப்பத்திற்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க.பொ.த.(சா. தரம்) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தரம்) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) ***உடற் தகைமைகள் :***

உயரம் : 5 அடி 2 அங்குலம் (ஆகக் குறைந்தது)

**குறிப்பு 1.**- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரி ஒருவரின் உடற் தகைமைகள் சற்று குறைவாக இருப்பினும், அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிவின்படி தகைமை பெறுவர்.

(ஈ) ***பார்வை தொடர்பான தேவைப்பாடு :***

ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்றைய கண்ணின் பார்வை 6/ 18 ஆகவும் இருப்பின் ஏற்றுக் கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) ***பிற தகைமைகள்.*** - விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்).

**5. ஆட்சேர்ப்பு முறை.**- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் அல்லது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

மீற்றர் 1000 - 05 நிமிடங்கள் 14 விநாடிகள்.

உடற்தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் பெற்றவர்கள் மாத்திரம் இறுதி எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(i) எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :-

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை பற்றிய வினாத்தாள் ;
* பொது அறிவும் நுண்ணறிவும் (01 மணித்தியாலம்.)

**6. மருத்துவப் பரீட்சை.**- விண்ணப்பதாரி தனது நியமனத்தை பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, ஆகக்கூடிய புள்ளிகள் மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலில் அவர்களின் நிலையின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

**7. பின்னணி விசாரணைகள்.**- (அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும், அவரின் கிட்டிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என தெரியவந்தால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

**8. அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தல் :**

- பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007 ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச சேவைக்கு, 2007.07.01 ஆந் திகதிக்குப் பின் மாகாண/ அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும், சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.
- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்கள் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை சம்பள ஏற்றம் பிற்போடப்படும்.

9. **நியமனக் கொள்கைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செலுத்துதல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் மூன்று ஆண்டு கால பயிலுநர் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரி அரசாங்கத்தின் மொழிக்கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனவிதிக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்குவிதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவார்கள்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்கள்.

(உ) நியமனம் பெற்ற உத்தியோகத்தர் பொலிஸ் மா அதிபரின் அனுமதி இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய முடியாது. எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் பிரகாரமும் 2006.10.19 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருப இலக்கம் 1952/2006 மற்றும் 2007.08.09 (திருத்தப்பட்டது) பிரகாரம் பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் விசேட காரணங்களை தெரிவித்து திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட பயிலுநர் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் பயிலுநர் காலம் முடிவடை வதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களை செலுத்துவதற்கு சம்மதம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப் படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்வது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கை 1693/2003 இன் பிரகாரம் பொலிஸ் விதிமுறைகளுக்கு ஏற்ப கட்டுப்பட்டு நடப்பதாக உறுதியுரை/சத்தியம் செய்ய வேண்டும்.

(ஏ) பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுநர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் தனது பதவியில் நிரந்தரமான பின் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய புறக்கிருத்தி செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்);

(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரி 11 x 8 அங்குல அளவில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்த லாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

என். கே. இலங்ககூன்,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

*பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி (சாதாரணம்)*

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பதாரியின் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-----. (பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் - மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் மாவட்டம் :-----.
(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :-----. பிரதேச செயலகம் :----.
(ஏ) தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :-----, கையடக்க தொலைபேசி இல. :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருப வர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின்தந்தை வழிப் பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----. (பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----;

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா? ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் மற்றும் முகவரிகளைக் குறிப்பிடுக :-----.

(அ) -----.
(ஆ) -----.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகிய தற்கான காரணங்களைக் குறிப்பிடுக :-----.

16. (அ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு சேவையில் இருக்கிறீர்களா ? :-----. (அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்).

(ஆ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது தவறு தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீர்களா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீர்களா ? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்ட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை யென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யான வையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத் திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

5-329

## இலங்கைப் பொலிஸ் திணைக்களம்

உப பொலிஸ் பரிசோதகர் பதவி

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2015.08.05 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 1,90,200 - 7 x 2,160 - 2 x 2,880 - 8 x 3,840 - 17 x 4,500 ரூபா 3,18,300.

மேலும், இவ்வுத்தியோகத்தர்களுக்கு மற்றைய அரச உத்தியோகத்தர் களுக்கான வாழ்க்கைச் செலவு கொடுப்பனவுடன் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/2013 இன் பிரகாரம் அமைவான கொடுப்பனவுகளுக்கு உரித்துடைய வர்களாவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத்திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதந்தோறும் வழங்கப்படும் :

(அ) கடினக் கொடுப்பனவுகள் : ரூபா 2,000 ;

(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :

(1) வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 12,000 ;
(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 9,600.

(இ) வேறு கொடுப்பனவு :
(1) சீருடைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250 ;

(ஈ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(உ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(ஊ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(எ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும் ;

(ஏ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :

(அ) வயதெல்லை.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்களுக்கும் (SA) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதிற்கு உட்பட்டவர்களாக இருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(ஆ) கல்வித் தகைமைகள்.- க. பொ. த. (சா. தர) பரீட்சையில் கணிதம் மற்றும் தாய்மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தி யடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாத வராகக் கருதப்படும்.

**குறிப்பு 3**.- விருப்பத்திற்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) பௌதிக தகைமைகள் :

* உயரம் : 5 அடி 6 அங்குலம் (ஆகக் குறைந்தது)

* மார்பு : 32 அங்குலம் ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு 1**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதீக தகைமைகள் சற்று குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின்படி தகைமை பெறுவர்.

(ஈ) பார்வை தொடர்பான தேவை.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரண மாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) *பிற தகைமைகள்.-* விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்து பெற்றவர்கள் விவாகமான வர்களாகக் கருதப்படுவர்). மற்றைய தகைமைகள் உடைய ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்களுக்கும் (SA) இது ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை.-** தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் பொலிஸ் திணைக்களத்தினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் அல்லது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.-

மீற்றர் 1000 - 3 நிமிடங்களும் 14 விநாடிகள்.

- உடற் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் இறுதி எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(i) எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக கட்டுரை எழுதுதல்.
* பொது அறிவும் நுண்ணறிவும் (1 மணித்தியாலம்)

6. **மருத்துவப் பரிசோதனை :**

* விண்ணப்பதாரர் தனது நியமனத்தைப் பெற முன்னர் மருத்துவ பரிசோதனையில் சித்தியடைய வேண்டும். மருத்துவ பரிசோதனையானது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஒரு அங்கம் மட்டுமே ஆகும். மருத்துவ பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் தற்போது உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை, ஆகக்கூடிய புள்ளிகள் மற்றும் அவர்களது திறமை அடிப்படையில் அமைந்த பட்டியலில் அவர்களின் நிலையின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்படுவர். மருத்துவ பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணைகள்.-** (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தையும் அவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரர் பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

8. **அரச கரும மொழித் தேர்ச்சிக் கொள்கையை அமுல் படுத்துதல் :**

- பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம், 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சிபெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மட்ட மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்கள் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

9. **நியமனக் கொள்கைகள்.-** இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்வதற்கு உரித்துடையவர்.

10. **சேவை நிபந்தனைகள்.-** (அ) நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங் கத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவார்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோ கத்தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(உ) நியமனம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது. எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பகுதி II பொலிஸ் வர்த்தமானியின் பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 1952/2006 ஆம் இலக்க 2007.08.09 ஆந் திகதியுடைய பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் (திருத்தப்பட்டது) பிரகாரம் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களைத் தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடை வதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக் காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச்

செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக் கொள்வது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர்கள் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக, 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்று கோவையினை பின்பற்றுவதாக பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஏ) தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர்கள் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர்கள் தமது பதவியில் உறுதிப்படுத்திய பின் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய புறக்கிருத்தி செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) சேவையில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;

(ஊ) தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற்பிரதி ;

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பான விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

உப பொலிஸ் பரிசோதகர் பதவி

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பதாரரின் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பிரதேச செயலகப் பிரிவு :-----.
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) நிரந்தர முகவரிக்குரிய கிராமசேவகர் பிரிவு :-----. பிரதேச செயலகம் :-----.

(ஊ) தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :-----, கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பு : அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ) -----.
(ஆ) -----.

15. (அ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக ? :-----.

16. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்ட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை யென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யான வையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத் திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ....................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவி :-----.
திகதி :-----.

5-330

---

## அரசாங்க தகவல் திணைக்களம்

### அரசாங்க தகவல் திணைக்களத்தின் (விசேட ஊடகப் பிரிவில்) பணிப்பாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளல்

அரசாங்க தகவல் திணைக்களத்தின் (விசேட ஊடகப் பிரிவில்) பணிப்பாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்வதற்காக தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இந்த அறிவித்தலில் 'செயலாளர்' என்ற சொல்லுக்குப் பொருள்படுவது, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் என்பதாகும்.

*2. **நேர்முகப் பரீட்சை**.-* நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி வெகுசன ஊடக மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சினால் தீர்மானிக்கப்படும்.

| பரீட்சிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் பகுதிகள் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியெய்துவதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் (இணைத்துக்கொள்வதற்கான அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக)<br><br>பட்டப் பின்படிப்பு 15 புள்ளிகள்<br>பட்டப்பின் படிப்பு டிப்ளோமா 10 புள்ளிகள்<br><br>க. எ.- இந்தக் கல்வித் தகைமைகள் பொதுசன தொடர்பாடல்/ சமூகவியல்/அரசியல் விஞ்ஞானம் அல்லது அது சார்ந்த துறையில் பெற்றிருத்தல் வேண்டும். | 40 | ஏற்புடையதல்ல |
| 2. மேலதிகத் தொழில்சார் தகைமைகள் :<br><br>செய்திகள் மற்றும் ஊடகவியல் அல்லது அது சார்ந்த ஒரு துறையில் டிப்ளோமாக்கள்<br>குறைந்தபட்சம் 9 மாத கால டிப்ளோமா பாடநெறியை முடித்திருந்தால் 10 புள்ளிகள்<br>குறைந்தபட்சம் 6 மாத கால டிப்ளோமா பாடநெறியை முடித்திருந்தால் 5 புள்ளிகள் | 25 | |
| மேலதிக அனுபவம்.- (சான்றிதழ்/ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.) அத்துறையில் ஒவ்வொரு வருட அனுபவத்திற்கும் முறையே 3 புள்ளிகள் வீதம் | 30 | |
| நேர்முகப் பரீட்சையில் காட்டும் சுயதோற்றம் மற்றும் திறன் | 5 | |
| மொத்தம் | 100 | |

*3. **நியமிக்கப்படவுள்ளவர்களின் எண்ணிக்கை**.-* அரசாங்க தகவல் திணைக்களத்தில் (விசேட ஊடகப் பிரிவில்) பணிப்பாளர் பதவிக்கு (ஒப்பந்த அடிப்படையில்) 1 வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

*4. **நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி**.-* அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புரைகளுக்கமைய தீர்மானிக்கப்படும்.

*5. **சேவை நிபந்தனைகள்**.-* அரசாங்க சேவையில் நியமனம் சம்பந்தமாக கடைப்பிடிக்கப்படும் பொது நிபந்தனைகளுக்கும், 2014.08.14 ஆந் திகதிய அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட அரசாங்க தகவல் திணைக்களத்தின் விசேட ஊடகப் பிரிவில் பணிப்பாளர் பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) இணைத்துக்கொள்ளும் விதிமுறைக்கென இயற்றப்பட்ட சட்டங்களுக்கும், நிபந்தனைகளுக்கும், அப்படியான இணைத்துக்கொள்வதற்கான விதிமுறைகளில் அல்லது பின்பு இயற்றப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்படும் விதத்தில் தெரிந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி அரசாங்க தகவல் திணைக்களத்தில் (விசேட ஊடகப் பிரிவில்) பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

6. தமக்கு வழங்கப்பட்ட பதவிக்கான பொறுப்பை குறிப்பிட்ட தினத்தில் பொறுப்பேற்க முடியாமல் போனவிடத்து அல்லது நியமனம் வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை பொறுப்பேற்க மறுத்தாலோ அல்லது தவிர்த்தாலோ விண்ணப்பதாரியின் நியமனத்தை இரத்துச் செய்ய அரச சேவை ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

*7. **மாதாந்தக் கொடுப்பனவு**.-* 30,000 ரூபாவாகும். ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் பொது நிர்வாக சுற்றறிக்கை 09/2007 மற்றும் அதன் பின்பு வந்த சுற்றறிக்கைகளின் நிபந்தனைகளுக்கிணங்க மீள இணைத்துக்கொள்ளப்படுவர்.

*8. **தகைமைகள்**.-* விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று-

(i) ***கல்வித் தகைமைகள்***.- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலோ அல்லது பட்டப்படிப்பை நடாத்துவதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினாலோ வழங்கப்பட்ட பட்டதாரி சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும் ;
(குறிப்பு.- வெகுசன தொடர்பாடல்/சமூகவியல்/ அரசியல் விஞ்ஞானம் ஆகிய பாடநெறியில் பட்டம் பெற்றிருந்தால் விசேட தகைமையாகக் கருதப்படும்.)

அல்லது

ஊடகத்துறை சார்ந்த நிறுவனத்தில் நிறைவேற்றதிகாரம் கொண்ட பதவியில் குறைந்தபட்சம் 10 வருடங்கள் பணியாற்றியிருத்தல் வேண்டும் ;

(ii) ***தொழில்சார் தகைமைகள்***.- அரசாங்கத்தினால் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் ஒன்றில் செய்திகள் மற்றும் ஊடகவியல் சம்பந்தமான பாடநெறியில் டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும் ;

(iii) ***அனுபவம்***.- அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட செய்திகள் வழங்கும் நிறுவனம் ஒன்றில் குறைந்தபட்சம் 6 வருடங்களாவது நிறைவேற்றதிகாரம் கொண்ட பதவியை வகித்த அனுபவம் இருத்தல் வேண்டும். (மேலே 8, 1 தகைமைகளைப் பூர்த்திசெய்த பரீட்சார்த்திகளுக்கு மாத்திரம்) ;

(iv) ***உடற்தகைமைகள்***.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையில் தேவைப்படும் பிரதேசத்தில் சேவையாற்றவும், பதவியின் கடமை நிமித்தம் பணியாற்றக்கூடிய போதியளவு உடல் மற்றும் உள ரீதியாக இயலுமானவராக இருத்தல் வேண்டும் ;

(v) *வேறு தகைமைகள் :*

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) சிறந்த பண்பாளராக இருத்தல் வேண்டும் ;
(iii) பதவியில் இணைத்துக்கொள்வதற்குத் தேவையான 8 மற்றும் 9 இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளும் விண்ணப்பம் கோரும் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தினத்தில் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

9. **வயது**.- விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று குறைந்தபட்ச வயது 18 வருடங்கள் ; அதிகபட்ச வயது 50 வருடங்கள் ; ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு அதிகபட்ச வயது 67 வருடங்கள்.

10. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இந்த அறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப அமையும் விதத்தில் ஏ4 (A4) அளவுத்தாளில் விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் வேண்டும் என்பதை விசேடமாக கருத்தில் கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் கோரப்பட்ட சகல தகவல்களும் தமது கையெழுத்துக்களால் தெளிவாக நிரப்பப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்றவிதத்தில் இல்லாத விண்ணப்பப் படிவங்களும், பூரணமான தகவல்களை வழங்காத விண்ணப்பப் படிவங்களும் முன் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் போட்டோ பிரதியை தம்முடன் வைத்திருத்தல் உபயோகமாக இருக்கும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் வழங்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரி விசாரித்து உறுதிப்படுத்தல் வேண்டும். அப்படி இல்லாவிடில் அந்த விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படக் கூடும்.

(ஆ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில், வெகுசன ஊடக மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சு, 'அசிதிசி மெதுர', இல. 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு 2015.06.08 ஆந் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடிய விதத்தில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவம் உள்ளடக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக, "அரசாங்க தகவல் திணைக்களத்தின் (விசேட ஊடகப் பிரிவு) பணிப்பாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளல்" என்ற சொற்களை குறிப்பிடுதல் வேண்டும். அத்தினத்திற்குப் பின்பு கிடைக்கப்பெறும் எந்த விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(இ) முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காணாமல் போனமை மற்றும் தாமதமாகியமை சம்பந்தமான எந்த முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

11. விண்ணப்பதாரி சமர்ப்பித்த தகவல்கள் தெரிந்துகொண்டே தவறாக சமர்ப்பித்திருப்பதாக தெரியவரும் பட்சத்தில் அல்லது ஏதாவது முக்கிய தகவல்களை வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவர் சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

12. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வழங்கப்பட்ட உள்ளடக்கங்கள் சீரற்றதாகவோ அல்லது முரணானதாகவோ இருந்தால் சிங்களத்தில் உள்ள உள்ளடக்கங்கள் சரியானதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

13. இந்த ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத வேறு ஏதாவது ஒழுங்குவிதிகள் இருந்தால் அது சம்பந்தமாக அரச சேவை ஆணைக் குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
வெகுசன ஊடக மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சு.

வெகுசன ஊடக மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சு,
இல. 163, கிருலப்பனை மாவத்தை,
பொல்ஹேன்கொடை,
கொழும்பு 05,
2015, ஏப்பிறல் 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

**அரசாங்க தகவல் திணைக்களத்தின் (விசேட ஊடகப் பிரிவில்) பணிப்பாளர் பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) இணைத்துக்கொள்ளல்**

1. தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3 [ ]
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

2. தனிப்பட்ட விபரங்கள் :

2.1 முதலெழுத்தை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : Mr./Mrs./Miss :----.
உ-ம் : SILVA, A. B.

2.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.4 தனிப்பட்ட விலாசம் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.5 ஆணா/பெண்ணா ? ஆண் - 0
பெண் - 1 [ ]
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

2.6 விவாகமானவரா ? /விவாகமாகாதவரா ?
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2 [ ]
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

2.7 இனம் :
(சிங்களவர்-1, தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்கள்-4, ஏனையவர்-5) [ ]
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டில் குறிப்பிடவும்)

2.8 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.9 பிறந்த திகதி :

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

2.10 விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

2.11 தொலைபேசி இலக்கம் (இருந்தால்) :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. கல்வித் தகைமைகள் :

| பல்கலைக் கழகம் | பெற்ற பட்டம் | பட்டதாரியென வழங்கப்பட்ட திகதி | பாடநெறி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

4. தொழில்சார் தகைமைகள் :----.

5. அனுபவம் :----.

6. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை யெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .................................... அவரது கையொப்பத்தை ............................... ஆந் திகதியன்று என் முன்னிலையில் இட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

(விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர் ஒருவர் / சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையின் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது மாதாந்தம் மொத்தச் சம்பளமாக 22,935 ரூபாவிற்கு மேல் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

5-272

## அரசாங்க தகவல் திணைக்களத்தின் விசேட ஊடகப் பிரிவில் www.news.lk இணையத்தளத்தின் இணையத்தள பகுப்பாளர் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளல்

அரசாங்க தகவல் திணைக்களத்தின் விசேட ஊடகப் பிரிவில் www.news.lk இணையத்தளத்தில் இணையத்தள பகுப்பாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்வதற்காக தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இந்த அறிவித்தலில் 'பணிப்பாளர் நாயகம்' என்ற சொற்களுக்கு பொருள்படுவது அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகமென்பதாகும்.

2. **நேர்முகப் பரீட்சை.-** நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினம் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

| பரீட்சிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் பகுதிகள் | ஆகக் கூடிய புள்ளிகள் 100% | இணைத்துக் கொள்வதற்கான குறைந்தபட்ச புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் (இணைத்துக்கொள்வதற்கான ஆரம்ப தகைமைகளுக்கு மேலதிகமாக)<br><br>**க. எ.-** இதற்கான கல்வித் தகைமை.- கணினி விஞ்ஞானம்/ தகவல் தொழில் நுட்பம், வெகுசன ஊடகம், செய்திகள் வழங்குதல், மக்கள் தொடர்பாடல் விஞ்ஞானம் அல்லது அது சார்ந்த துறையில் தகைமை பெற்றிருத்தல் வேண்டும். | 40 | ஏற்புடையதல்ல |
| 2. தொழில்சார் தகைமைகள்.- தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமாக-<br><br>9 மாதத்திற்கு மேலான டிப்ளோமா பாடநெறிக்கு - 15 புள்ளிகள்<br><br>6 மாதத்திற்கு மேலான பாடநெறி சான்றிதழ் - 10 புள்ளிகள் | 25 | |
| 3. மொழித் திறன் (சான்றிதழ் மூலம் உறுதிப் படுத்தல் வேண்டும்.) : சிங்கள மொழியில் தேர்ச்சிக்கு - 5 புள்ளிகள் தமிழ் மொழியில் தேர்ச்சிக்கு - 5 புள்ளிகள் ஆங்கில மொழியில் தேர்ச்சிக்கு - 5 புள்ளிகள் | 15 | |

| பரீட்சிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் பகுதிகள் | ஆகக் கூடிய புள்ளிகள் 100% | இணைத்துக் கொள்வதற்கான குறைந்தபட்ச புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 4. தொழில்சார் அனுபவம் (சான்றிதழ்/ பதிவேடு மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்) முறையே 3 புள்ளிகள் வீதம் | 15 | ஏற்புடையதல்ல |
| 5. நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறன் | 5 | |
| மொத்தம் | 100 | |

(i) மேலே தரப்பட்டுள்ள அட்டவணைக்கிணங்க ஒவ்வொரு துறைக்கும் நேர்முகப் பரீட்சையில் வழங்கப்படவுள்ள அதிகபட்ச புள்ளிகளை ஒரு ஒழுங்கான விதிமுறைக்கேற்ப நியமனம் வழங்கும் அதிகாரி அனுமதிப்பார்.

(ii) நேர்முகப் பரீட்சையில் பெறும் முழுப்புள்ளிகளின் திறமையின் அடிப்படையில் மற்றும் நிலவும் வெற்றிடங் களுக்கு ஏற்ப நியமனங்கள் வழங்கப்படும்.

3. **நியமிக்கப்படவுள்ளவர்களின் எண்ணிக்கை.**- அரசாங்க தகவல் திணைக்களத்தில் விசேட ஊடகப் பிரிவில் www.news.lk இணையத்தளத்தில் இணையத்தள பகுப்பாளர் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) பதவிகளுக்கு (ஒப்பந்த அடிப்படையில்) 3 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

4. **நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி.**- அரசாங்க தகவல் திணைக்களத்தின் தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப் படும்.

5. **சேவை நிபந்தனைகள்.**- அரச சேவையில் நியமனம் சம்பந்தமாக கடைப்பிடிக்கப்படும் பொது நிபந்தனைகளுக்கும், 2014.10.23 ஆந் திகதியில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட அரசாங்க தகவல் திணைக்களத்தின் விசேட ஊடகப் பிரிவில் www.news.lk இணையத்தளத்தில் இணையத்தள பகுப்பாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) பதவிக்கு (ஒப்பந்த அடிப்படையில்) இணைத்துக் கொள்ளும் விதிமுறைக்கென இயற்றப்பட்ட சட்டங்களுக்கும், நிபந்தனை களுக்கும், அவ்வாறான சேவையில் இணைத்துக்கொள்வதற்கான விதிமுறைகளில் அல்லது பின்பு இயற்றப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்பட்ட விதத்தில் தெரிந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி அரசாங்க தகவல் திணைக்களத்தில் இணையத்தள பகுப்பாளர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

6. தமக்கு வழங்கப்பட்ட பதவிக்கான பொறுப்பை குறிப்பிட்ட தினத்தில் பொறுப்பேற்க முடியாமல் போனவிடத்து அல்லது நியமனம் வழங்கப்பட்ட பதவியின் கடமைகளைப் பொறுப்பேற்க மறுத்தாலோ அல்லது விலகிப்போனாலோ விண்ணப்பதாரியின் நியமனத்தை இரத்துச்செய்ய அரச சேவை ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

7. **மாதாந்த கொடுப்பனவு.**- 25,000 ரூபாவாகும்.

8. **தகைமைகள்.**- விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று,

(i) கல்வித் தகைமைகள்.- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலோ அல்லது பட்டப்படிப்பை நடாத்துவதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினாலோ வழங்கப்பட்ட பட்டதாரி சான்றிதழை கணினி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், வெகுஜன ஊடக செய்திகள் வழங்குதல், மக்கள் தொடர்பாடல் ஆகிய துறைசார்ந்த ஒரு பாடத்தை உள்ளடக்கியதாகப் பெற்றிருத்தல்.

அல்லது

ஊடகம் சார்ந்த ஒரு நிறுவனத்தில் நிறைவேற்றதிகாரம் கொண்ட பதவியில் 10 வருடங்கள் பணியாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.

(ii) தொழில்சார் தகைமைகள் :

(1) கணினி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடநெறிகளில் பட்டம் பெற்ற பரீட்சார்த்திகள் ஊடகவியலில் சான்றிதழ் பாடநெறியை திறம்பட பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும் ;

(2) ஊடகவியல்/ செய்திகள் வழங்குதல்/ மக்கள் தொடர்பாடல் ஆகிய பாடநெறிகளில் பட்டம் பெற்ற பரீட்சார்த்திகள் கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடநெறிகளில் சான்றிதழ் பாடநெறியை திறம்பட பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(iii) அனுபவம்.- பட்டதாரிகளாக இருந்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் தகவல் தொழில்நுட்பம் அல்லது ஊடகத் துறையில் குறைந்தபட்சம் 3 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். பட்டதாரியல்லாத பரீட்சார்த்திகள் ஊடகத்துறையில் நிறைவேற்றதிகாரம் கொண்ட பதவியில் குறைந்தபட்சம் 10 வருடங்கள் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.

(iv) உடற்றகைமைகள்.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையில் தேவைப்படும் பிரதேசத்தில் சேவையாற்றவும், பதவியின் கடமை நிமித்தம் பணியாற்றக்கூடிய போதியளவு உடல் மற்றும் உள ரீதியாக இயலுமானவராக இருத்தல் வேண்டும்.

(v) வேறு தகைமைகள் :

(1) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(2) சிறந்த பண்பாளராக இருத்தல் வேண்டும் ;

(3) பதவியில் இணைத்துக்கொள்வதற்குத் தேவையான சகல தகைமைகளும் பூரணப்படுத்தப்பட்டிருத்தலுடன் விண்ணப்பம் கோரும் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தினத்தில் அந்த தகைமைகள் யாவும் பூரணப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும்.

9. **வயது.**- குறைந்தபட்சம் 18 வருடங்கள் ; அதிகபட்சம் 50 வருடங்கள்.

10. **விண்ணப்பிக்கும் முறை.**- (அ) இந்த அறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திலுள்ள விதத்தில் ஏ4 (A4) அளவுத்தாளில் விண்ணப்பப்படிவத்தை தயாரித்தல் வேண்டும் என்பதை விசேடமாக கருத்தில் கொள்ள வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் கோரப்பட்ட சகல தகவல்களும் தமது கையெழுத்துக்களால்

தெளிவாக நிரப்பப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ற விதத்தில் இல்லாத விண்ணப்பப்படிவமும், பூரணமான தகவல்களை வழங்காத விண்ணப்பப்படிவமும் அறிவிக்கப்படாமலே நிராகரிக்கப்படும். நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியை தம்முடன் வைத்திருத்தல் உபயோகமாக இருக்கும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் வழங்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அப்படி இல்லாவிடில் அந்த விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படக் கூடும்.

(ஆ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் ''அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 5'' என்ற விலாசத்திற்கு 2015.06.08 ஆந் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடிய விதத்தில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் உள்ளடக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக ''அரசாங்க தகவல் திணைக்களத்தில் இணையத்தள பகுப்பாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளல்'' என்ற சொற்களைக் குறிப்பிடுதல் வேண்டும். அத்தினத் திற்குப் பின்பு கிடைக்கப்பெறும் எந்த விண்ணப்பப்படிவமும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

(இ) சகல விதத்திலும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காணாமல் போனது மற்றும் தாமதமாகியது சம்பந்தமான எந்த முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப் பட மாட்டாது.

11. விண்ணப்பதாரி சமர்ப்பித்த தகவல்கள் தெரிந்துகொண்டே தவறாக சமர்ப்பித்திருப்பதாக தெரியவந்தாலும், அப்படியில்லாது ஏதாவது முக்கிய தகவல்களை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவர் சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

12. இந்த ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத வேறு ஏதாவது ஒழுங்குவிதிகள் இருந்தால் அது சம்பந்தமாக அரச சேவை ஆணைக்குழு வினால் தீர்மானம் எடுக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால்
அதிகாரம் வழங்கப்பட்ட அரசாங்க தகவல்
பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க தகவல் திணைக்களம்,
இல. 163, கிருலப்பனை மாவத்தை,
கொழும்பு 5,
2015, ஏப்பிறல் 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

☐
(அலுவலக உபயோகத்திற்காக)

**அரசாங்க தகவல் திணைக்களம்**

*விசேட ஊடகப் பிரிவில் www.news.lk இணையத்தளத்தில் பகுப்பாளர் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) பதவிக்கு (ஒப்பந்த அடிப்படையில்) ஆட்சேர்த்துக்கொள்ளல்*

1. தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3 ☐
(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்.)

2. தனிப்பட்ட விபரங்கள் :

2.1 முதலெழுத்தை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) Mr./ Mrs./ Miss : ----.
(உதாரணமாக : SILVA, A. B.)

2.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.4 தனிப்பட்ட விலாசம் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.5 ஆணா/பெண்ணா :
ஆண்-0
பெண்-1 ☐
(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்.)

2.6 விவாகமானவரா/விவாகமாகாதவரா ?
விவாகமாகாதவர்-1
விவாகமானவர்-2 ☐
(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்.)

2.7 இனம் :
(சிங்களவர்-1, தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்கள்-4, ஏனையவர்-5) ☐
(ஏற்புடைய இலக்கத்தைக் கூட்டில் குறிப்பிடவும்.)

2.8 தேசிய அடையாள அட்டை இலக்கம் :
☐☐☐☐☐☐☐☐☐☐

2.9 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

2.10 விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று-

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

2.11 தொலைபேசி இலக்கம் (இருந்தால்) :
☐☐☐☐☐☐☐☐☐☐

3. கல்வித் தகைமைகள் :

| பல்கலைக் கழகம் | பெற்ற பட்டம் | பட்டதாரியென வழங்கப்பட்ட திகதி | பாடநெறி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

4. தொழில்சார் தகைமைகள் :

| நிறுவனம் | சான்றிதழ் பாடநெறி | வழங்கப்பட்ட திகதி | காலம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

5. அனுபவம் :----.

6. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் :

மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானவையெனவும் பிழையற்றவையெனவும் உறுதிமொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ...................................... அவரது கையொப்பத்தை .................................... ஆந் திகதியன்று என் முன்னிலையில் இட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

(விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர் ஒருவர் / சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையின் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது மாதாந்தம் மொத்தச் சம்பளமாக 22,935 ரூபாவுக்கு மேல் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்).

5-273

---

## இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம் - அநுராதபுரம்

### மஹோபாத்தியாய பதவிக்கு விண்ணப்பங்கள்/ நியமனங்களுக்கான அழைப்பு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம் மூலம் அனுமதிக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப் பட்டவாறான 1996 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழக சட்டத்திலுள்ள விதிகளுக்கமைய இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகத்தின் மஹோபாத்தியாய பதவிக்கு விண்ணப்பங்கள் மற்றும் நியமனங்களுக்காக அழைக்கப்படுகின்றது.

2. (1) இரண்டு (2) வருட காலப்பகுதிக்குள் ஆய்வு ஒன்றினை மேற்கொண்டதன்மேல் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பௌத்தம் சார்ந்த கற்கை நெறிகள்/அல்லது ஏதேனும் அதனுடன் தொடர்புடைய வேறு விடயத்தில் பட்டப்பின் படிப்பு பட்டத்தைப் பெற்றிருத்தல்.

(2) கற்பித்தல் துறையில் பத்து வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(3) கிழக்கத்திய மொழிகளில் மிகவும் சிறப்பான ஆற்றலைப் பெற்றிருத்தல்.

(4) ''உப சம்பதவை'' பெற்று இருபது (20) ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள (நல்லொழுக்கமுடைய) உப சம்பந்த பிக்குவாக இருக்க வேண்டும்.

3. மூன்று (3) ஆண்டு காலப்பகுதிக்கு குறித்த மஹோபாத்தியாய நியமிக்கப்படல் வேண்டும். பல்கலைக்கழகத்தின் முழுநேர அலுவலராகவும் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் மற்றும் பிரதம கல்விசார் அதிகாரியாகவும் இருத்தல் வேண்டும். ''உத்தாரித்தார சபை''யின் உத்தியோகத்தின் காரணமாய் ஏற்பட்ட அங்கத்தவராக மஹோபாத்தி யாயர் இருக்க வேண்டும். மற்றும் சபை மற்றும் செனட் இரண்டினதும் உத்தியோகத்தின் காரணமாய் ஏற்பட்ட அங்கத்தவர் மற்றும் தவிசாளராகவும் இருக்க வேண்டும். பல்கலைக்கழகத்தினுள் நல்லொழுக்கத்தைப் பேணுவதற்கு அவர் பொறுப்பாக இருத்தல் வேண்டும். குறித்த சபையின் நிர்ணயிக்கும் காரணி அல்லது பணிப்புரை ஆகியவற்றுக்கு இணங்கிச் செல்லும் கணக்காளராக குறித்த மஹோபாத்தியாயர் அவர்கள் இருக்க வேண்டும். குறித்த சபை மற்றும் செனட் சபை ஆகியவற்றின் தீர்மானங்களுக்கு பயன் உண்டாக்குவதற்கும் அல்லது பயன் உண்டாக்குவதை உறுதி செய்ய வேண்டும். மஹோபாத்தியாயர் மூன்று ஆண்டு காலப்பகுதிக்கு அல்லது அவர் தனது அறுபத்தைந்தாவது (65) வயதைப் பூர்த்திசெய்தலின் மேல் இதில் எந்த நிகழ்வு முன்னராக இடம்பெறுகிறதோ மஹோபாத்தியாய இந்தப் பதவியை வகிக்க முடியும்.

4. பல்கலைக்கழகத்தின் அதி உச்சமான வேதனத் திட்டத்தில் அமர்த்துவதற்கு மஹோபாத்தியாய தகுதியுடையவர் ஆவதுடன் அரசாங்கம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றினால் அனுமதிக்கப்பட்ட ஏதேனும் வேறு படிகளுக்கும் அவர் தகுதியுடையவர் ஆவார். எரிபொருள் படிகள் உள்ளடங்கலான அரச முறை வாகனம் ஒன்றும் மற்றும் பல்கலைக்கழக வளாகத்திற்குள் வதிவிட வசதிகளும் அவருக்கு வழங்கப்படும்.

5. விண்ணப்பித்த பிக்குகள் பல்கலைக்கழக முறைமையில்/ அரச சேவையில்/ கூட்டுத்தாபன மற்றும் நியாயாதிக்கப்பட்ட சபைகள் ஆகியவற்றில் குறித்த விண்ணப்பதாரிகள் சேவையில் இருந்தால் குறித்த தொழில்தருநர்களிடமிருந்து விண்ணப்பிப்பதோடு, இப்பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டால் இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியுமானதாகவும் விண்ணப்பப்படிவத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். இச்சட்டம் இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் பிக்குகளுக்குச் சார்பற்றது.

6. தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம்/பெயர்ப்பத்திரத்துடன் மேலேயுள்ள பந்தியில் (1), (2), 3) மற்றும் (4) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உறுதிப்படுத்துவதற்காக தேவையான அறிக்கைகளின் பிரதிகள் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கைகள் விண்ணப்பப் பத்திரம்/ பெயர்ப்பத்திரத்துடன் விண்ணப்பிக்கப்பட வேண்டும். (அறிக்கைகளில் முதற்பிரதி கேட்கும் சந்தர்ப்பங்களில் வழங்கப்பட வேண்டும்.)

(1) பிறந்த திகதி உட்பட விண்ணப்பதாரி/நியமனம் பெற்றவரின் முழுமையான சுயவிபரக் கோவை ;

(2) விண்ணப்பதாரி/ நியமனம் பெற்றவர் தெரிவுசெய்யப்பட்டால் பல்கலைக்கழகத்தினால் சாதிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் தமது நோக்கு (vision) மற்றும் நடவடிக்கைகள் பற்றிய விபரம் ;

(3) நியமனம் கிடைக்கும் பட்சத்தில் நியமனம் பெறுபவரின் சம்மதக் கடிதம் ;

(4) இலங்கை பிக்கு பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர் கல்வி நிறுவகங்கள், பகிரங்க சேவை, கூட்டுத்தாபனங்கள், நியாயாதிக்க சபைகள் ஆகியவற்றில் குறித்த விண்ணப்பதாரிகள்/ நியமனம் பெற்றோர்கள் பணியில் இருந்தால் குறித்த தொழில்தருநர்களிடம் இருந்து விடுவிப்பதற்கான கடிதம்.

7. மேலே குறித்துரைக்கப்பட்ட தகைமைகளைப் பெற்றுள்ள பிக்கு விண்ணப்பதாரிகள்/நியமனம் பெற்றோர் ஆகியோர்களிடமிருந்து குறித்த சபையானது மூன்று பெயர்களைத் தெரிவுசெய்யும். மற்றும் அத்தகைய பெயர்களை "உத்தாரித்தார சபை"க்குச் சமர்ப்பிக்கும். இதன் பின்னராக குறித்த "உத்தாரித்தார சபை" ஆனது ஒரு பிக்கு விண்ணப்பதாரியின் பெயரை கௌரவ அமைச்சர் ஊடாக அதிமேதகு சனாதிபதிக்கு பரிந்துரை செய்யும்.

8. 2015.05.29 ஆந் திகதியன்று அல்லது இதற்கு முன்னராக சென்றடையக் கூடியதாக "பதிவாளர், இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம், புத்தளம் வீதி, அநுராதபுரம்" எனும் முகவரிக்கு விண்ணப்பங்கள் / நியமனங்கள் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும்.

9. விண்ணப்பம்/ நியமனத்திற்கான பொருட்கள் தாங்கிய கடித உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் "மஹோபாத்தியாயர் பதவி" எனக் குறிக்கப்படல் வேண்டும்.

யூ. டி. தொடன்வெல,
பதிவாளர் மற்றும்
சபையின் செயலாளர்.

இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம்,
புத்தளம் வீதி,
அநுராதபுரம்,
2015, மே 05.

5-493

---

## இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இற்கு தொழிற் தகைமைக்கமைய திறமை அடிப்படையில் நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2014

2010.09.10 ஆம் திகதிய 1670/ 33 ஆம் இலக்க மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கைக் கணக்காளர் சேவை பிரமாணக் குறிப்பின் 7.4 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த கணக்காளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதனுடன் இணைத்துள்ள மாதிரி படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2015.06.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சின் செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தினை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "**இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இன் கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம்**" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

2. **ஆட்சேர்ப்பு முறை**.- இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இல் காணப்படும் வெற்றிடங்களில் 30 இற்கு கூடாத தொகையினரை நியமிப்பதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியும், நேர்முகப் பரீட்சையினை நடாத்தியும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

3. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் 2010.09.10 ஆந் திகதிய 1670/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கைக் கணக்காளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் மூலம் விதிக்கப்பட்டுள்ள சேவை நிபந்தனைகள் மற்றும் அதில் செய்யப் பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யக் கூடிய திருத்தங்களுக்கும் உட்பட்டு தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர். மேலும் பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இன் பிரகாரம் மொழித் தேர்ச்சியினையும் தெரிவுசெய்யப்படும் அலுவலர்கள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

4. **கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பள அளவுத் திட்டம்**.- 2006.04.25 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இன் எஸ்.எல். 1-2006 என்னும் சம்பள குறியீட்டுக்கமைய மாதாந்தச் **சம்பள அளவுத் திட்டம்**.- ரூ. 22,935 - 10X645 - 8X790 - 17X1050 - ரூ. 53,555 ஆகும்.

5. **தொழிற்சார் தகைமைகள்** :

(i) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இறுதிப் பரீட்சை

அல்லது

(ii) பொதுநலவாய நாடு ஒன்றின் பட்டயக் கணக்காளர் நிறுவகம் ஒன்றின் இறுதிப் பரீட்சை

அல்லது

(iii) பொதுநலவாய நாடு ஒன்றின் பட்டயம் பெற்ற முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம் ஒன்றின் இறுதிப் பரீட்சை

அல்லது

(iv) சான்றிதழ் பெற்ற பட்டயக் கணக்காளர் நிறுவகம் ஒன்றின் இறுதிப் பரீட்சை

அல்லது

(v) ஐக்கிய இராச்சியத்தின் சான்றிதழ் பெற்ற பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

6. **உடல்சார் தகைமைகள்**.- அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக் கூடியவாறு அனைத்து வழிகளிலும் உடல்சார் தகைமையினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

7. **பிற தகைமைகள்** :

(i) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ii) சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) யாதேனுமொரு சமயத்தலைவராக பணியாற்றும் எவரும் இது பற்றிய சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.4.3.3 இன் பிரகாரம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைபெற மாட்டார் ;

(iv) *தகைமை பெறும் திகதி.-* விண்ணப்பதாரர் ஒருவர், சேவைக்கு நியமிப்பதற்குத் தேவையான தகைமையினைப் பெற்றுள்ளதாக ஏற்றுக்கொள்வதற்கு மேற்படி தகைமையினை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தகைமையினை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. **வயதெல்லை**.- வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியில் 22 வயதைவிடக் குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

9. பின்வரும் ஆவணங்களை விண்ணப்பதாரர் விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழின் பிரதி ஒன்று ;

(ஆ) ஆகக் கூடிய கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகள் ;

(இ) இரண்டு நற்சான்றிதழ்கள் (இதிலொன்றினை பாடசாலையின் அதிபர்/ பல்கலைக்கழக விரிவுரையாளர் அல்லது பேராசிரியர் ஒருவரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.)

10. திறமை அடிப்படையில் நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யும்போது கட்டமைப்புசார் புள்ளிகள் வழங்கல் திட்டம் பின்வருமாறு :

| பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படுகின்ற தலைப்புக்கள் | வழங்கப்படும் உச்ச புள்ளிகள் | சித்தியடைவதற் வதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| தொழில்சார் தகைமைகள் | 50 | |
| கல்வித் தகைமைகள் | 20 | |
| அனுபவம் | 15 | 40 |
| கணினி அறிவு | 10 | |
| நேர்முகப் பரீட்சைகள் குழு | 05 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | 40 |

11. அரசாங்க சேவை மற்றும் மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவரினால் தமது விண்ணப்பப் படிவத்தின் மூலப் பிரதியினை தமது திணைக்களத் தலைவரின் ஊடாக பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சின் செயலாளரினை அடையக்கூடியவாறு சமர்ப்பித்தல் வேண்டும். அதில் மற்றுமொரு பிரதியை விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதி தினத்திற்கு முன்னர் நேரடியாகவே அம்முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

12. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பப்படிவமானது இந்த அறிவித்தலுடன் இணைத்துள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக ஏ4 அளவிலான கடதாசி ஒன்றில் விண்ணப்பதாரரினாலேயே தயாரிக்கப்பட வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்படிவத்தில் இலக்கம் 1 முதல் 5 வரையில் முதற் பக்கத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறும் மொழியில் நிரப்புதல் வேண்டும். எவ்வாறாயினும் விண்ணப் பத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பை ஆங்கில மொழியிலும் (ஆங்கில பெரிய எழுத்தில்) குறிப்பிட வேண்டும்.

(இ) முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு. தபாலில் இடும்போது விண்ணப்ப மொன்று காணாமற்போதல் அல்லது தாமதமாதல் தொடர்பாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட மாட்டாது.

(ஈ) விண்ணப்பதாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யாதேனுமொரு தகவல் அவர் அதனை பிழையானது என தெரிந்து கொண்டே சமர்ப்பித்துள்ளமை கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், அல்லது யாதேனுமொரு முக்கிய விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருக்கும் பட்சத்தில், நியமனம் பெறுவதற்கான தகைமையிழப்பிற்கும் அரச சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் அவர் ஆளாவார்.

13. நிலவுகின்ற வெற்றிடங்கள் அனைத்தையும் அல்லது அதில் ஒரு பகுதியினை நிரப்புவது பற்றிய இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

14. தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர் ஒருவர் மூன்று வருட தகுதிகாண் காலம் முடிவடைந்ததன் பின்னர் பதவியில் நிரந்தரமாக்கப் படுவதற்கு முன்னர் பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் :-

(i) அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள் ;
(ii) சட்டம் மற்றும் முகாமைத்துவம் ;
(iii) நிருவாகம் ;
(iv) அறிக்கை எழுதுதல் மற்றும் முகாமைத்துவத்திடம் தகவல்களை சமர்ப்பித்தல்.

15. இலங்கைக் கணக்காளர் சேவைக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினாலேயே நியமனம் வழங்கப்படும். அவ்வாறு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர். முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் உரிய சிங்களம்/தமிழ் மொழித் தேர்ச்சி பரீட்சையில் சித்தியடைந்துள்ள நிலையில் மேற்படி காலம் முடிவடைந்ததன் பின்னர் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர்.

16. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலத்தில் வெளியிடப்பட்ட அறிவித்தலே மேலோங்கும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

செயலாளர்,
பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும்
சனநாயக ஆட்சி அமைச்சு.

பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும்
சனநாயக ஆட்சி அமைச்சு,
2015, மாச்சு 12.

## இலங்கைக் கணக்காளர் சேவையின் தரம் III இற்கான நியமனம் தொழிற் தகைமைக்கு அமைய திறமை அடிப்படையில் நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2015

இலக்கம் : [ ]

(அலுவலக பயன்பாட்டிற்காக)

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் மொழி : [ ]
சிங்களம்-1, தமிழ் - 2, ஆங்கிலம்-3
உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதவும்) மொழியைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : Mr./Mrs./Miss. :----.

உ+ம் : Mr. SILVA, A.B.

1.2 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. 2.1 நிரந்தர முகவரி :----.

2.2 அலுவலக முகவரி :----.

(அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் அவரது அலுவலக முகவரியை எழுதுதல் வேண்டும். முகவரியில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில், அதுபற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும்.)

3. 3.1 பிறந்த திகதி :----.

3.2 2015. 03.27 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

4. பால் :

| ஆண் | பெண் |
|---|---|

5. விவாகமானவரா ? விவாகமாகாதவரா ? என்பது பற்றி :

| விவாகமானவர் | விவாகமாகாதவர் |
|---|---|

6. மொழித் தேர்ச்சி தொடர்பாக சித்தியடைந்துள்ள உச்ச அளவிலான பரீட்சை :

| (i) சிங்களம் | (ii) தமிழ் | (iii) ஆங்கிலம் |
|---|---|---|
| (1)<br>(2)<br>(3) | | |

7. **கல்வி, தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப தகைமை.**–(பெற்றுக் கொண்டுள்ள உயர் பட்டம், திறமை சித்திகள், தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப தகைமைகள் பற்றிய விபரம், அவற்றினைப் பெற்றுக் கொண்ட திகதி, பட்டத்தில் சிறப்புத் தரம் பெற்றிருப்பின் அது பற்றிய விபரம், தோற்றிய பாடங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிடவும்.) : ..................
..........................................................................
..........................................................................
..........................................................................

8. தற்போது புரியும் தொழில் மற்றும் அதற்கு முன்னர் வகித்த சகல பதவிகளும் :- தொழிலில் இணைந்த திகதி, அதிலிருந்து விலகிய திகதி, இறுதியாக பெற்ற வருடாந்த சம்பளம் மற்றும் தொழிலை முடிவுறுத்தியமைக்கான காரணம் என்பவற்றினைக் குறிப்பிடவும்.

| பதவி | இருந்து | வரையில் | வருடாந்தச் சம்பளம் (ரூ.) | சேவையினை முடிவுறுத் தியமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| (1)<br>(2)<br>(3)<br>(4)<br>(5) | | | | |

9. நீங்கள் ஏதேனுமொரு குற்றவியல் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?

அவ்வாறாயின் திகதி, வழக்கு இலக்கம் என்பவற்றுடன் முழு விபரத்தையும் தரவும் :----.

10. வேறு ஏதேனும் தகவல்கள் இருப்பின் குறிப்பிடவும் :----.

11. நற்சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் நபர்கள் தவிர்ந்த உங்களைப் பற்றிய தகவல் அறிந்த நன்கு விசாரிக்கக் கூடிய இரண்டு நபர்களுடைய பெயர் மற்றும் முகவரி என்பவற்றினை குறிப்பிடவும்.-

(1) ----.
(2) ----.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையிலும் மற்றும் எனது நம்பிக்கையின் பிரகாரமும் உண்மையானவை என இத்தால் உறுதிமொழிகிறேன். இதில் காணப்படும் தகவல்களில் ஏதும் பொய்யானவை அல்லது பிழையானவை என கண்டுபிடிக்கப் படும் பட்சத்தில் நான் தகுதியற்றவனாவதற்கும், எனக்கு எதுவித நஷ்டஈடும் வழங்காது என்னை சேவையில் இருந்து அகற்றுவதற்கும் உட்படுவதனை நான் அறிந்து வைத்துள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

*விண்ணப்பதாரர் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் பட்சத்தில் அவர் பற்றிய திணைக்களத் தலைவரின் சிபாரிசு*

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................ அவர்கள் .................... ஆந் திகதி முதல் ............................................ அலுவலகத்தில் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவராக/ மாகாண அரசாங்க உத்தியோகத்தர் ஒருவராக சேவையாற்றுகிறார் எனவும், அவரது வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானதாக அமைந்துள்ளன எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்,
பதவி முத்திரையும்.

திகதி :----.

5-560

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரதத் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்காக பயிலுநர்களை சேர்த்துக்கொள்ளல் - 2015

இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரதத் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்கு 2015 ஆம் ஆண்டிற்காக பயிலுநர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக இங்கு 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **அடிப்படைத் தகைமைகள் :**

(அ) வயது.- 2015.05.31 ஆந் திகதியன்று வயது 16 இற்குக் குறையாமலும் 25 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) கல்வித் தகைமைகள்.- சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் ஏதேனும் 2 பாடங்களில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3. **பயிற்சி நெறி**.- பயிலுநர் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் பயிலுநர்களுக்கு கீழ்க்காணப்படும் தொழிலும் அத்தொழிற் பயிற்சிக்கு உகந்த காலவெல்லைக்குள் கற்பதற்குமான வசதிகள் அளிக்கப்படும். பயிற்சிநெறிகள் சிங்கள மொழி மூலம் மாத்திரம் நடாத்தப்படுவதுடன் கீழ்க்காணப்படும் தொழில் பயிற்சிக்கு 25 பேர் வீதம் தேர்ந்தெடுக்கப் படுவர் :-

1. டீசல் என்ஜின் இயந்திர தொழில்நுட்பவியலாளர் - வருடம் 2 1/2
2. ஒட்டும் நுட்பவியலாளர் - வருடம் 3 (NVQ level 04)
3. மின் தொழில்நுட்பவிய லாளர் (சக்தி) - வருடம் 3 1/2 (NVQ level 04)
4. இயந்திர தொழில்நுட்ப வியலாளர் (பொது) - வருடம் 3 1/2 (NVQ level 04)

4. **விண்ணப்பம்**.- விண்ணப்பதாரர்கள் இத்துடன் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு ஏற்ப (A4) வெள்ளைத் தாளில் தயாரித்து முழு விபரங்களும் சரியான முறையில் குறிப்பிடப்படல் வேண்டும். தேவையான சரியான தகவல்கள் உள்ளடக்கப்படாத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5. **பயிற்சிநெறிக்கு தேர்ந்தெடுத்தல்**.- (i) எழுத்துமூலமாகவும் செயல் மூலமாகவும் பரீட்சிப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் தேவைப்படும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ளதும் 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் எழுத்துமூலமான பரீட்சைக்கு அழைக்கப் படுவர்.

(ii) **எழுத்துமூலப் பரீட்சை**.- கணிதம், அடிப்படை தொழில்நுட்ப அறிவு மற்றும் பொது அறிவையும் அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படும். எழுத்துமூலமான பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் அந்தந்த பயிற்சிநெறிகளின் தன்மைக்கு ஏற்ப நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(iii) எழுத்துமூலமானதும் மற்றும் தொழில் தகைமை பரிசோதனை களின் மூலம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் அந்தந்த பயிற்சி நெறிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.

6. **பரீட்சை மொழி மூலம்**.- பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்காக மீள வழங்கப்படாத 500 ரூபா பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். அக்கட்டணம் மருதானை தபால் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு புகையிரத பொது முகாமையாளரின் பெயருக்கு காசுக் கட்டளையாக செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்பட்ட காசுக் கட்டளையை விண்ணப்ப தாரியின் விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். காசுக் கட்டளை இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறேதும் காரணத்திற்காகவோ பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்பட மாட்டாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

8. **பரீட்சை நிலையம்**.- சகல தகைமைகளையும் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்களுக்கான எழுத்து மூலமான பரீட்சை கொழும்பில் உள்ள பரீட்சை நிலையத்தில் மாத்திரம் நடாத்தப்படும்.

9. **உறுதிமொழி கைச்சாத்திடல்**.- பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப் படுகின்ற சகல விண்ணப்பதாரிகளும் பயிற்சிநெறிக்கான குறித்த காலவெல்லைக்குள் பயிற்சியைத் திருப்திகரமான முறையில் பயிலுவதாக தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையுடன் ஒப்பந்தமொன்றுக்கு இணங்குதல் வேண்டும்.

10. தேர்ந்தெடுக்கப்படும் பயிலுநர்களுக்கு தொழில் வழங்கப்படு வதற்கான உத்தரவாதம் திணைக்களத்தினால் வழங்கப்பட மாட்டாது.

11. கீழ்க்காணப்படும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு ஏற்றவகையில் விண்ணப்பப்பத்திரத்தைத் தயாரித்து, "பணிப்பாளர், இலங்கை - ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையம், கல்தமுல்ல வீதி, இரத்மலானை" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'இ.ஜே.தொ.ப.நி-2015' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

12. **விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி**.- விண்ணப்பப்படிவம் 2015.07.10 ஆந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் தாமதித்து கிடைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

விஜய அமரதுங்க,
புகையிரத பொது முகாமையாளர்.

இலங்கைப் புகையிரத சேவை,
கொழும்பு 10,
2015, ஏப்பிறல் 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

### இலங்கை-ஜேர்மன் புகையிரதத் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்திற்காக பயிலுநர்களை சேர்த்துக்கொள்ளல் - 2015

(அலுவலக உபயோகத்திற்காக)

1. முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

2. முகவரி (சிங்களம்/தமிழ்) :----.

3. மாவட்டம் :----.

4. பிறந்த திகதி :----.

5. பால் (ஆண்/பெண்) :----.

6. தொலைபேசி இலக்கம் :----.

7. கல்வித் தராதரம் (க. பொ. த. சாதாரண தரம்) :

முதல் அமர்வு :- சுட்டெண் :-

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

இரண்டாம் அமர்வு :- சுட்டெண் :-

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

8. விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :----.

9. விண்ணப்பம் கோரப்பட்டுள்ள வர்த்தமானிப் பிரசுரத்தின் மூலம் தனக்கு விருப்பமான தொழில் பயிற்சிகள் இரண்டை முறையாகக் குறிப்பிடவும் :

(1) :----.
(2) :----.

9. ............................................... தபால் அலுவலகத்திற்கு 500 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் இலக்கம் ....................................... ஐ உடைய காசுக் கட்டளையை இத்துடன் இணைத்துள்ளேன் (காசுக் கட்டளை விலகாத முறையில் இத்துடன் இணைக்கவும்).

10. மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் நான் உறுதிப்படுத்துகிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் தகவல்கள் தவறானதென நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகுதியற்றவனாகக் கருதப்படுவேன் எனவும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்பு கண்டறியப்படுமிடத்து பயிற்சியிலிருந்து அகற்றப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

5-409

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

இலங்கை நிலஅளவைத் திணைக்களம்

**நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற பட வரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை – 2015**

நிலஅளவையாளர் நாயகத்தால், உத்தரவுபெற்ற படவரைஞராக தொழில் புரிவதற்கான சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை கொழும்பில் நடைபெறும். இப்பரீட்சை இரண்டு பகுதிகளாக நடாத்தப்படும்.-

பகுதி I – ஆள் கூற்றுப்பத்திரம் தயாரித்தல்

பகுதி II – பட வேலை

2. பகுதி I - பரீட்சை 2015 ஆம் ஆண்டு ஆடி மாதம் 25 ஆந் திகதியும், பகுதி II - பரீட்சை 2015 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 17 மற்றும் 18 ஆந் திகதிகளிலும் நடைபெறும். பகுதி I பரீட்சையில் சித்தியடையாத பரீட்சார்த்திகள் பகுதி II பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற படவரைஞராக தொழில் புரிவதற்கான சான்றிதழ் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு பரீட்சார்த்திகள் ஒரே தடவையில் பகுதி I மற்றும் பகுதி II ஆகிய இரு பரீட்சைகளிலும் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

3. பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றைச் செய்ய முடியுமென்பதில் என்னைத் திருப்திப்படுத்த வேண்டும் :-

(அ) புலக் குறிப்பிலிருந்து ஆள் கூற்றுத் தாள் ஒன்றைச் சரியாக தயார்செய்து அளவைப் போகு ஒன்றின் ஆள் கூறுகளைக் கணித்தல் ;

(ஆ) புலக் குறிப்பிலிருந்து சரியான கிடைப்படம் ஒன்றை ஆள் கூறுகளையும், புறக்டாக்ரரையும் (protractor) பாவித்துக் கீறி சரியாகப் பரப்பைக் கணிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

4. பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகள் :

(அ) தேசிய கல்விச் சான்றிதழ் (N. C. E.) அல்லது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு (02) திறமைச்சித்தி (Credit Pass) உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தி ;

மற்றும்

(ஆ) ஒரு வருடத்திற்கு குறையாத படவரைஞர் பாடநெறியுடன் தொடர்புடைய பாடநெறியை அரச தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது வேறு பகுதி அரச நிறுவனங்களில் (Semi Government Institution) வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியிருத்தல்.

5. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் 400 ரூபா ஆகும். பரீட்சைக் கட்டணத்தை நிலஅளவையாளர் நாயகத்தின் சிறாப்பர் அலுவலகத்திலோ, எந்த ஒரு மாவட்ட நில அளவை அலுவலகத்திலோ அல்லது அளவையியல் படமாக்கல் நிறுவனம் தியத்தலாவையிலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டின் ஒரு புகைப்படப் பிரதியை எதிர்கால தேவைக்காக வைத்திருக்கவும்). மேலும்

காசுக் கட்டளைகளோ, காசோலைகளோ இதன் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின்றி அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் முத்திரைகளாகவோ அல்லது காசோலைகளாகவோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. **விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும்.**- இந்த விளம்பரத்தின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய 21 செ. மீ. x 29 செ. மீ. (ஏ4) அளவிலான தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பதிவுத்தபால் மூலம் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை – 2015" என்று குறிப்பிடவும்.

சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர் (பரீட்சை),
பரீட்சைகள் கிளை,
நிலஅளவையாளர் நாயக அலுவலகம்,
தபால் பெட்டி இலக்கம் 506,
கொழும்பு 05.

தரப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப் படாத விண்ணப்பப்படிவங்களும், சரியான முறையில் பூரணப்படுத்தப் படாத விண்ணப்பப்படிவங்களும், விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்களும் நிராகரிக்கப்படும்.

7. எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

8. 2015 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 29 ஆந் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. வரைபுத்தாள்களும் ஆள் கூற்றுத்தாள்களும் பரீட்சை மண்டபத்தில் வழங்கப்படும். இருந்தும் வரைதல் உபகரணங்கள், ஆள் கூறுக்களைக் கணிக்க உதவும் கணித வாய்ப்பாடுகள் மற்றும் விண்ணப்பதாரிகளுக்கு வேண்டிய உபகரணங்கள் யாவற்றையும் அவர்களே கொண்டு வருதல் வேண்டும். பரீட்சை மண்டப மேற்பார்வையாளரின் அனுமதியுடன் சாதாரண கணிப்பொறிகள் (Non Programmable Scientific Calculators) பாவிக்க அனுமதிக்கப்படும்.

10. (i) பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளரைத் திருப்திப்படுத்துமளவுக்கு தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு ஆவணத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் தனது ஆள் அடையாளத்தை நிரூபிக்கலாம் :-

(அ) ஆள் பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஆள் அடையாள அட்டை ;

(ஆ) ஒரு செல்லுபடியான கடவுச்சீட்டு ;

(இ) ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்துடன் பரீட்சார்த்திக்கு பரீட்சை தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்குள் வழங்கப்பட்டதும், வைத்திருப்பவரின் நிழற் படத்தைக் கொண்டதுமான ஏதாவதொரு சான்றிதழ் அல்லது உத்தரவுச்சீட்டு.

(ii) பந்தி 9 (i) இல் வேண்டப்பட்ட அடையாளத்தை நிரூபிக்க இயலாத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

11. இப்பரீட்சை மெற்றிக் முறையில் நடத்தப்படும்.

பி. எம். பி. உதயகாந்த ,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவையாளர் நாயகத்தின் அலுவலகம்,
த. பெ. இல. 506,
கிருல வீதி,
கொழும்பு 05,
2015, ஏப்பிறல் 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிலஅளவைத் திணைக்களம்**

*நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற பட வரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை - 2015*

சுட்டிலக்கம் : [ ]
(அலுவலகப் பாவனைக்கு)

(அ) (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி
(தமிழில்) : ----.
(ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(ii) முதலெழுத்தைக் குறிக்கும் பெயர் (தமிழில்) :----.
(ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(ஆ) பால் :----.
(இ) பதவி :----.
(ஈ) தொழில் பார்க்குமிட முகவரி :----.
(உ) நிரந்தர முகவரி (தமிழில்) :
----.
(ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(ஊ) பிறந்த திகதி :----.
(எ) கல்வித் தகைமைகள் (உறுதிப்படுத்திய உண்மைப் பிரதிகள் (certified true copies) இணைக்கப்பட வேண்டும்) :----.
(ஏ) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்கு தோற்ற உத்தேசித்திருக்கும் மொழி :
(சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) :----.
(ஐ) காசு செலுத்திய அலுவலகம் :----.
(ஒ) பற்றுச்சீட்டு இலக்கம் :----.
திகதி :----.

(பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்)

மேற்கூறிய விபரங்கள் யாவும் சரியானதென்றும், உண்மையானதென்றும் உறுதிமொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

5-280

## மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

வனப் பாதுகாப்புத் திணைக்களம்

*வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் வன விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015*

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் வன விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகுதி வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **சம்பள அளவுத்திட்டம்**.- MN 1-2006-A பொ.நி.சு. 06/2006(IV) அமைவாக

ரூ. 13,120 - 10 x 145 - 11 x 170 - 10 x 240 - 10 x 320 - ரூ. 22,040 ஆகும்.

2. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும் :-**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையது மாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையைச் செலுத்துதல் வேண்டும் ;

(ii) இந்த நியமனம் மூன்று (3) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும் ;

(iii) வன விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் திணைக்களத்தின் ஊடாக பிரதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பல்வேறுபட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து மக்கள் பங்களிப்புடன் வினைத்திறனுடனும் திருப்திகரமானதுமாக நடாத்திச் செல்லல் வேண்டும் ;

(iv) வன விரிவாக்கல் உத்தியோகத்தர்களின் சேவை நிலையங்கள் நாட்டின் காட்டுப் பகுதிகளிலுள்ள கஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ளதுடன் தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் நாட்டின் எப்பிரதேசத்திலும் எந்தவொரு நிலைமையிலும் பணிக்கப்படும் பிரகாரம் பணியாற்றுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும் ;

வர்த்தமானி அறிவித்தலில் (IIஅ) பந்தியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையின் பதவிகளுக்கு நியமிக்கும்போது இயைபுள்ள பொது நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

(v) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

3. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். இதற்கமைவாக 1997.06.30 ஆந் திகதியன்று அல்லது இதற்கு முன்னரும் 1985.06.30 ஆந் திகதியன்று அல்லது இதற்குப் பின்னரும் பிறந்துள்ளவர்களுக்கு மாத்திரம் இதற்காக விண்ணப்பிப்பதற்குத் தகுதி உண்டு.

4. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**.- சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் தகைமைகளைத் திருப்திகரமானவாறு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (சா. த.) தரப் பரீட்சையில் ஒரே தடவையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(ii) க. பொ. த. (உ. த.) தரப் பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு (1) பாடத்தில் (வழமையான பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பதாரர்கள் நல்லொழுக்கத்தைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும் ;

(vi) எல்லாப் பரீட்சார்த்திகளும் நாட்டின் எப்பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் பொருத்தமான உள மற்றும் உடல் ரீதியான ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்புத் திட்டம்**.- (i) மேலே 4 ஆம் பந்தியின்கீழ் தகுதி பெறுகின்ற விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளுகின்ற புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்குமுறையின் மீது ஆட்சேர்ப்புச் செய்வதற்குள்ள எண்ணிக்கை மற்றும் அவ்வாறு எதிர்பார்க்கின்ற எண்ணிக்கையில் 25% எண்ணிக்கை கொண்ட விண்ணப்பதாரிகள் கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சையிலும் எழுத்துமூலப் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்கு முறையின் மீது நிலவுகின்ற/ உள்ள வெற்றிட எண்ணிக்கைக்கு நேரொத்ததாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

(ii) கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சைக்குப் பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும் :

| பரிசீலனை செய்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | ஆகக்கூடிய புள்ளி |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 30 |
| 2. தொழில்சார் தகைமைகள் | 30 |
| 3. கணினி ஆற்றல் | 15 |
| 4. மொழித்தேர்ச்சி | 20 |
| 5. நேர்முகப் பரீட்சையில் காட்டுகின்ற திறமை | 05 |
| மொத்தப் புள்ளிகள் | 100 |

(iii) மேலே 5.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆட்சேர்ப்புச் செய்யவுள்ள/ நிலவுகின்ற இறுதி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும்போது சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் சிலர் இருப்பின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் ;

(iv) எழுத்துப் பரீட்சையிலும் கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்கு முறையின் மீது நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு நேரொத்ததாக தயாரிக்கப்பட்ட பெறுபேற்றினைக் கொண்ட அட்டவணை ஒன்று காடு பேணுநர் தலைமையதிபதிக்கு வழங்கப்படும். பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk வெப் தளத்தின் ஊடாக அறிவிக்கப்படும்.

(v) மேலே 5.1 இன்கீழ் தகுதி பெற்று தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் நுவரெலியாவில் அமைந்துள்ள இலங்கை வனக் கல்லூரியினால் நடாத்தப்படுகின்ற ஒரு வருட உள்ளக பயிற்சி நெறியின் பின்னர் நடாத்தப்படுகின்ற எழுத்துமூல மற்றும் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(vi) மேலே 5.1 இன்கீழ் தகுதி பெற்று தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் ஒரு வருடத்துக்குள் மரங்களை இனங்காணும் பரிசோதனையில் (மத்திய தரம்) சித்தியடைந்ததன் பின்னர் மூன்று (3) வருட திருப்திகரமான சேவைக்காலத்தின் பின்னர் பதவியில் உறுதிப்படுத்தப்படுவர்.

*6.* **பாடவிதானம்.**- எழுத்துமூல பரீட்சை, இரண்டு வினாத்தாள் களைக் கொண்டதாகும் :

(i) உளச்சார்பு (காலம் : 1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்.- விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான திறனையும் விவேகத்தை யும் பகுப்பாய்வையும் தீர்மானிக்கும் சக்தியை மதிப்பிடும் நோக்கில் பல்வகை சுருக்க விடைகளைத் தெரிவிக்கும் ஐம்பது (50) வினாக்களைக் கொண்டதாக அமையுமென்பதுடன் எல்லா வினாக்களுக்கும் விடை யளித்தலும் வேண்டும்.

(ii) பொது வினாத்தாள் (காலம் : 2 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்.- இந்த வினாத்தாள் காடு பேணல், தொடர்பாடல் முறை, வன விரிவாக்கல் நடவடிக்கைகள், நாற்று முகாமைத் துவம், வனச் செய்கை மற்றும் சமூக ஒத்துழைப்புடனான அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் விண்ணப்பதாரி களுக்கு உள்ள அறிவு மற்றும் ஆற்றலை அளவிடுவதற்கான வினாத்தாள்களைக் கொண்டதுடன் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தலும் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரிகள் இந்த இரண்டு (2) வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் தோற்றுதல் வேண்டும். சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

*7.* **விண்ணப்பங்களும் ஏனைய விபரங்களும் :**

(i) இந்த விளம்பரத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப விண்ணப்பப்படிவத்தின் 1 தொடக்கம் 8 வரையிலான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும் மீதி அடுத்த பக்கத்திலும் உள்ளடக்கியவாறு 21 X 29 செ.மீ. (ஏ4 அளவு) கடதாசியில் இரு பக்கங்களையும் உபயோகித்து உரியவரால் விண்ணப்பப்படிவங்கள் தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவம் பரீட்சையில் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தில் தமது கையெழுத்தினாலேயே பூர்த்திசெய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தையிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வன விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான (திறந்த) போட்டிப் பரீட்சை - 2015" எனக் குறிப்பிட்டு 2015.06.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவு, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் (தனிப்பட்ட பெயருக்கு அல்லது வேறேதேனும் முகவரிக்கு அனுப்புதலாகாது) ;

(ii) பூர்த்திசெய்யப்படாத அல்லது தாமதமாகக் கிடைக்கின்ற விண்ணப்பப் பத்திரங்கள் அறிவிக்காமலே நிராகரிக்கப் படும் ;

(iii) அஞ்சலில் தொலைந்துபோகும் விண்ணப்பப்பத்திரங்கள் தொடர்பில் எதுவும் பொறுப்பேற்கப்பட மாட்டாது ;

(iv) விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சை அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும். ஏதேனும் நிறுவனமொன்றின் ஊடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினாலும், அவ்வாறு இல்லாத விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையின் அதிபர், ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர், பிரிவின் கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் ஆணைபெற்ற உத்தியோகத்தர் 2,40,260 ரூபா அல்லது அதற்குக் கூடுதலான வருடாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறுகின்ற அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியை வகிக்கின்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதியினால் அல்லது தலைமை பிக்குவினால் அல்லது பிற மதங்களின் மத ஸ்தானங்களுக்கு பொறுப்பாகவுள்ள மதத் தலைவர்களாக கருதக்கூடிய நிலையிலுள்ள ஒருவரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும் ;

(v) இந்த விளம்பரத்தில் காட்டப்பட்டுள்ள நியதிகளுக்கு ஏற்புடையதாகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் ;

(vi) அரசாங்க சேவையில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்கள் தனது விண்ணப்பங்களை அவர்களது திணைக்களத் தலைவரி னூடாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் தகுதி யானவரென தெரிவுசெய்யப்படுமிடத்து இந்தத் திணைக் களத்தின் சேவையிலிருந்து விடுவிப்பதற்கு இணங்குவ தாகவும் தெரிவித்தல் வேண்டும் ;

(vii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

*8.* **பரீட்சைக் கட்டணங்கள் :**

(i) பரீட்சைக் கட்டணம் 500 ரூபா ஆகும். இந்தக் கட்டணத்தைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-03 இன்கீழ் அரசாங்க வருமானத்தில் வரவு வைத்து நாட்டிலுள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் அல்லது உப அஞ்சல் அலுவலகத்திலும் மேற்குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட உரிய பற்றுச்சீட்டை விண்ணப் பத்தில் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும் (இந்த பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை விண்ணப்பதாரி வைத்துக்கொள்ளல் பொருத்தமானதாகும்). பரீட்சைக் கட்டணம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும் ;

(ii) எந்தவொரு காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சையொன் றுக்காக மாற்றுவதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

9. பின்வரும் ஆவணங்களில் ஒன்றையோ அல்லது எல்லா வற்றையுமோ கோரப்படுமிடத்து சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம அலுவலரின் சான்றிதழ் (பிரதேசச் செயலாளரின் மேலொப்பத்துடன்) ;
(iv) நற்சான்றிதழ்கள் இரண்டு ;
(v) உரிய பிற சான்றிதழ்கள்.

**கவனிக்க வேண்டியது**.- ஆவணங்கள்/சான்றிதழ்கள் இவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.

10. **பரீட்சை நிலையங்களும் அனுமதி அட்டைகளும்** :

(i) பரீட்சையானது இந்த அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்று வதற்கு எதிர்பார்க்கின்ற நகரம் அதற்குரித்தான இலக்கம் விண்ணப்பத்தின் உரிய தலைப்பில் முதலாவது மற்றும் இரண்டாவது தெரிவுகளாகக் குறிப்பிடல் வேண்டும். ஏதேனும் நகரமொன்றில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்கு விண்ணப்பதாரிகள் போதுமானளவு விண்ணப்பிக்காத விடத்து இந்த விண்ணப்பதாரிகள் அவர்களது இரண்டாவது விருப்பாகக் காட்டியுள்ள நகரில் அல்லது அண்மையிலுள்ள வேறு நகரில் அமைக்கப்படுகின்ற பரீட்சை நிலையத்துடன் தொடர்பு படுத்தப்படுவர். அத்துடன் உத்தேச எல்லா நகரங்களிலும் மேலதிகமாக அல்லது பரீட்சை நிலையத்தைத் தாபிப்பதற்குப் போதுமான அளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத விடத்து பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ii) விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் உரிய கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் செம்மையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தி னால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் இதுபற்றிக் குறிப்பிட்டு பத்திரிகை விளம்பரங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடாத்தப்படுகின்ற திகதிக்கு ஆகக்குறைந்தது ஐந்து தினங்களுக்கு முன்னர் தங்களது அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவில் வினவ வேண்டும். இவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி போன்றவற்றைச் சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு அப்பால் வசிப்பவராயின் இந்த விபரங்களுடன் தொலைநகல் ஊடாக பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றைத் துரிதமாக பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பதாரிகள் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தில் காட்டப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு கோருதல் மிக்க பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு கோரும்போது பரீட்சைத் திணைக்களத் தினால் கோருகின்ற ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தன்னிடம் வைத்திருந்த விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தை அஞ்சல் செய்யும்போது பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் ஆயத்தமாக வைத்திருத்தல் பயனுள்ளதாக இருக்கும் ;

(iii) விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டையை விநியோ கித்தல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளாரென ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது என்பதுடன் பரீட்சைக்குத் தோற்றுகின்ற முதல் தினத்திலேயே தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iv) பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக் கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். இந்த ஒழுங்குவிதிகளை மீறுமிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படும் தண்டனைக்கும் அவர் ஆளாகுதல் வேண்டும்.

11. **விண்ணப்பதாரியின் ஆள் அடையாளம்**.- பரீட்சை நிலைய பரிசோதகர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும் என்பதுடன் இதற்காகப் பின்வரும் ஏதேனும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

12. **போலியான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்**.- தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் அல்லது தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் உரிய தகைமைகள் பூர்த்திசெய்யப்படவில்லை எனத் தெரியவருமிடத்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்யப்படும் என்பதுடன், பரீட்சார்த்தி அளித்துள்ள எவையேனும் விபரங்கள் அவரது அறிவுக்கு எட்டியவரையில் பொய்யானவையென்றும் அல்லது எவையேனும் முக்கிய விபரங்களை வேண்டுமென்றே மாற்றியுள்ளாரென அவர் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து அவர் அரசாங்க சேவையிலிருந்து பணிநீக்கத்திற்கு உட்படுவார்.

13. தேவையான சந்தர்ப்பங்களில் இந்த அறிவித்தலில் குறிப்பிடப் படாத விடயங்கள் தொடர்பில் காடு பேணுநர் தலைமை அதிபதியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப் படுகின்ற இந்த அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது ஏற்புடையதாகாமை உள்ளமை பற்றி தெரிய வருமிடத்து இவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலுக் கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

காடு பேணுநர் தலைமை அதிபதி.

வனப் பாதுகாப்புத் திணைக்களம்,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2015, ஏப்பிறல்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

*வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் வன விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015*

Open Competitive Examination for Recruitment to the Post of Forest Extension Officer of the Forest Department - 2015

பரீட்சைக்குத் தோற்றுகின்ற நகரம் :

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| முதல் தெரிவு | | |
| இரண்டாம் தெரிவு | | |

(அட்டவணை 1 இற்கமைவாகப் பூர்த்தி செய்யவும்.)

1. பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக)

2. (i) முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(உ-ம் : Gunawardhana, M. G. B. S.K.)
(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

3. (i) அனுமதி அட்டையை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(ii) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

4. ஆணா/ பெண்ணா ?
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக)

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

6. (i) பிறந்த திகதி :
ஆண்டு மாதம் திகதி
(ii) 2015.06.30 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் மாதங்கள் நாட்கள்

7. பிரசாவுரிமை :
பரம்பரையாக - 1
பதிவின் மூலம் - 2
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக)

8. தொலைபேசி இலக்கம் :

9. கல்வித் தகைமைகள் :

(i) கல்வி பொதுத்தராதர (சா. த.) பரீட்சை :

வருடம் : பரீட்சை இல. :

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(ii) கல்வி பொதுத்தராதர (உ. த.) பரீட்சை :

வருடம் : பரீட்சை இல. :

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

10. வேறு கல்வித் தகைமைகள் :----.

11. தொழில்சார்/வேறு தகைமைகள் :----.

12. (i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அஞ்சல் அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.

பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

13. (i) தாங்களுக்கு எப்போதாவது எந்தவொரு குற்றச்சாட்டுக் காகவாவது நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டுள்ளதா? ஆம்/ இல்லை

(ii) ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடுக :----.

14. தாங்கள் தற்பொழுது தொழில் புரிபவராயின் அது தொடர்பான விபரங்கள் :

(i) நிறுவனம் :----.
(ii) முதல் நியமனத் திகதி :----.
(iii) பதவி :----.
(iv) சம்பளம் :----.

15. தங்களைப் பற்றிய தகவல்களை வழங்கக்கூடிய உறவினரல்லாத இருவரது பெயரையும் முகவரியையும் குறிப்பிடுக.

(i) :----.
(ii) :----.

16. **விண்ணப்பதாரியின் பிரகடனம் :**

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விபரங்கள் ஏதும் பொய்யானவை அல்லது தவறானவையென தெரிவுசெய்வதற்கு முன்னர் தெரியவருமிடத்து எனது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படுமெனவும் நியமனம் பெற்றதன் பின்னர் இவ்வாறு தெரியவருமிடத்து நட்டஈடு இல்லாமலே பணி நீக்கம் செய்யப்படுவேன் எனவும் நான் அறிவேன். மேலும், பரீட்சை நடாத்துவதும் பெறுபேறுகளை வெளியிடுவதும் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

(கையொப்பத்தை உறுதிப்படுத்துபவர் முன்னிலையில் கையொப்பமிடல் வேண்டும்,)

திகதி :----.

17. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**
இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ............................... நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் 2015,................................ ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், இதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
(பதவி இலச்சினை)
முகவரி :----.
திகதி :----.

18. **விண்ணப்பதாரி அரசாங்க ஊழியராயின் திணைக்களத் தலைவரினால் இந்தப் பகுதி பூர்த்திசெய்தல் வேண்டும் :**
இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி .................................. இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/ அலுவலகத்தில் ...................................... ஆக நிரந்தர/தற்காலிக பதவியொன்றை வகிப்பவரெனவும் இவர் வழங்கியுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்படுமிடத்து இந்தத் திணைக்களத்தில் தற்பொழுது வகிக்கின்ற பதவியிலிருந்து விடுவிக்கலாம்/ விடுவிக்க முடியாது என இத்தால் தெரிவிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவர் அல்லது
அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
(இலச்சினையை இடுக.)
திகதி :----.
(தேவையற்ற வசனங்களைக் கீறிவிடுக.)

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவத்துடன் பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு/ ரசீது தவிர்ந்த வேறு ஏதும் ஆவணங்களை அல்லது அதன் பிரதிகள் இணைக்கப்படலாகாது.

**அட்டவணை**

பரீட்சை நிலையங்கள் தாபிக்கப்படுகின்ற நகரங்களும் நகர எண்களும்

| நகரம் | நகர எண் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலநறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொனறாகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

5-292